**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – இடைநிலை ஆசிரியர் பயிற்சி – கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சி 2013–14 மற்றும் 2014–15ஆம் ஆண்டிற்கான விளம்பரக் கட்டணச் செலவினம் ரூ.3,54,689/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 3**

**நாள் 02.02.2016**
**மன்மத–தை 19,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**
**படிக்கப்பட்டது:**

1 அரசாணை (நிலை) எண் 71, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 21.06.2012.

2 அரசாணை (நிலை) எண் 79, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 21.08.2013.

3 மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க எண் 2262/சிபதி/2014, நாள் 20.05.2014.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சியினை, 50 மாற்றுத் திறனாளிகளுக்கு, 2012–2013 ஆம் ஆண்டில் தொடர்வதற்கு ரூ.6,71,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.79, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 21.08.2013ல், 2012–2013 ஆம் நிதியாண்டில், பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சித் திட்டம் தொடர்பாக விளம்பர கட்டணம் செலவினமாக கூடுதலாக ரூ.41,530/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் பார்வையற்ற / காதுகேளாத / மனவளர்ச்சி குன்றியோருக்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு பட்டயப் பயிற்சி மற்றும் கை, கால் பாதிக்கப்பட்டோருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் பயில விரும்பும் மாணவ/மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று தெரிவு செய்து, பயிற்சியில் சேர்க்க ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டும் 'மே' மாதத்திலேயே விளம்பரம் செய்யப்பட்டு, பின்னர் அரசாணை பெறப்பட்டவுடன் விளம்பரச் செலவினத் தொகையினை பட்டியலிட்டு சம்பந்தப்பட்ட விளம்பர நிறுவனத்திற்கு வழங்கப்படும். கடந்த நிதியாண்டில் (2013–14)ல் திட்டத் தொடராணை பெறப்படாததால், விளம்பரக் கட்டணத் தொகை ரூ.1,64,983/– வழங்க இயலவில்லை. இந்நிதியாண்டில் (2014–15) கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் சேர விண்ணப்பங்கள் கோரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது எனவும், இத்திட்டத்தின் கீழ், 3 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால் குறைந்தபட்சம் 25 மாணவர்கள் இருந்தால் மட்டுமே இத்திட்டத்தினை செயல்படுத்த முடியும் என்பதால், ஆசிரியர் பயிற்சி இயக்ககத்தின் கீழ் இயங்கும் இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் சேர பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது எனவும், இப்பயிற்சியில் 2013–14ஆம் ஆண்டில் பயிற்சியில் சேர்ந்து தற்போது இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை (Stipend) வழங்கப்பட வேண்டும். 2013–14, 2014–15 ஆகிய நிதியாண்டுகளுக்கான விளம்பர கட்டணத் தொகை முறையே ரூ.1,64,983 மற்றும் ரூ.81,206 ஆக மொத்தம் ரூ.2,46,189/–ம், 2013–14 ஆம் ஆண்டில் பயிற்சியில் சேர்ந்து, தற்போது இரண்டாம்

[த.பி.பா]

ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் கல்வி உதவித் தொகை மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.1,12,000/—ம் சேர்த்து, மொத்தம் ரூ.3,58,189/— நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தின் கீழ் செயல்படும் சிறப்புப் பள்ளிகளில் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு, 2013—14 மற்றும் 2014—15ஆம் ஆண்டுகளுக்கான விளம்பர கட்டண தொகை முறையே ரூ.1,64,983/— மற்றும் ரூ.81,206/—ஆக மொத்தம் ரூ.2,46,189/—ம், 2013—14 ஆம் ஆண்டு பயிற்சியில் சேர்ந்து தற்போது இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை (Stipend) மற்றும் இதர செலவினங்களுக்கான தொகை ரூ.1,08,500/— சேர்த்து, ஆக மொத்தம் ரூ.3,54,689/—ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று எண்பத்தொன்பது மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3—ல் ஒப்பளிப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“2235 — சமூகப் பாதுகாப்பும் நலனும் 02— சமூக நலன். 101 —மாற்றுத் திறனாளிகள் நலன்—I திட்டத்தில் சேராதது DB—பார்வையற்ற, கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை தொடங்குவதற்காக மானியம் வழங்குதல் — 08—விளம்பரமும் பிரச்சாரமும் — 01—விளம்பரக் கட்டணங்கள்” (து.தொ.கு.2235—02—101—DB—0815) — ரூ.2,46,189**

**12.படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் —01 — மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு. (து.தொ.கு.—2235—02—101—DB—1216) — ரூ.1,08,500**

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், 2015—16—ம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2015—16ஆம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2015—16 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவை தவறாமல் நிதித் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 4879/நிதி(சந)/2015, நாள் 30.01.2016 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 2096 (இரண்டாயிரத்து தொண்ணூற்றாறு)ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—35.
மாநில கணக்காயர், சென்னை—18.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அலுவலகம், சென்னை—9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை—9.
நிதி (ச.ந./வ.செ.பொ.II)த் துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்